# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2406 - 2024 ඔක්තෝබර් මස 11 වැනි සිකුරාදා - 2024.10.11

*2406 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1956 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1970 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அமுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024, ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1953-B 82617-5,441 (2024/10)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலுாவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.*

***3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :***

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

***4. பணிக்கமர்த்தும் நியதிகள் :***

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

***6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :***

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;

II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;

III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;

IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;

V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;

VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;

VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;

VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:

(i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;

(ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;

(iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.

(iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;

(v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;

(vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;

(vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;

(viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;

(ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;

(x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;

(xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;

(xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;

(xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

*பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.*

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை நிரந்தர தொண்டர் கடற்படை

இலங்கை நிரந்தர கடற்படையின் குறுகிய கால அதிகாரிகள் மற்றும் தொண்டர் கடற்படை

### நேரடி நுழைவு அலுவலர்கள் (ஆண்/பெண்) பதவி வெற்றிடங்கள் - 2024

1. இலங்கை நிரந்தர நேரடி நுழைவு அதிகாரிகளுக்கான (ஆண்/பெண்) பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

2. பின்வரும் பிரிவுகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு தகுதிவாய்ந்த ஆண்/ பெண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிரந்தர கடற்படை நேரடி நுழைவு அலுவலர்கள் /குறுகிய கால அதிகாரிகளுக்கான நேரடி நுழைவு (05 வருட சேவைக்காக)**

அ. நிறைவேற்றுப்பிரிவு
ஆ. கடல்சார் பொறியியலாளர்
இ. பொறியியல் தொழிநுட்பம் (கப்பல் கட்டுமான)
ஈ. வாகன பொறியியல்
உ. வழங்கல் பிரிவு
ஊ. மின் மற்றும் மின்னணு பொறியியல் துறை
எ. கட்டுமான பொறியியல்
ஏ. பல் மருத்துவர் பிரிவு
ஐ. தகவல் தொழிநுட்பப் பிரிவு

**நிரந்தர கடற்படை நேரடி நுழைவு அலுவலர்கள் /குறுகிய கால அதிகாரிகளுக்கான நேரடி நுழைவு (05 வருட சேவைக்காக)**

ஒ. மருத்துவப் பிரிவு (நுண்ணுயிரியல் நிபுணர்)

**நேரடி நுழைவு**

ஓ. மருத்துவப் பிரிவு - நிர்வாக அதிகாரி சுகாதாரம் (நிரந்தர கடற்படை பிரிவு)
ஔ. இசைக்குழுப் பிரிவு இசை/நடனம் (நிரந்தர கடற்படை பிரிவு)
க. நிறைவேற்றுப் பிரிவு (தொண்டர் கடற்படை பிரிவு)
ங. கால்நடை மருத்துவர் (தொண்டர் கடற்படை பிரிவு)
ச. கணக்கு அதிகாரி (தொண்டர் கடற்படை பிரிவு)
ஞ. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அதிகாரி (தொண்டர் கடற்படை பிரிவு)
ட. தகவல் தொழில்நுட்பப் பிரிவு (தொண்டர் கடற்படை பிரிவு)

3. **அடிப்படைக் கல்வித் தகைமைகள்:**

அ. இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த. (சா./ த.) பரீட்சையில் தாய்மொழி மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் (C) மற்றும் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

ஆ. இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த. (சா./த.) பரீட்சையில் தாய்மொழி பாடத்தில் திறமைச் சித்தியுடன் (C) கணிதம் மற்றும் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் ஆங்கில பாடத்தில் டிப்ளோமா படித்திருத்தல் வேண்டும்.

4. **உயர்கல்வி மற்றும் தொழிற்தகைமைகள்:**

(அ) **பல் மருத்துவ பிரிவு**

பதவிநிலை - துணை லெப்டினன்ட் (ஆண்)

தகைமைகள் - உயிரியல் விஞ்ஞானம் அல்லது உயிரியல் பாடத்தின் கீழ் க. பொ. த. (உ./த.) தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானத்தில் பொதுப் பட்டம்.

வயது - 30 வயதுக்கு குறைவாக இருத்தல்.

(ஆ) **கடல்சார் பொறியியலாளர்**

பதவிநிலை - லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகத்தில் கடல் அல்லது இயந்திரப் பொறியியல் நான்கு வருட முழுநேரப் பட்டம்.

இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனம் (IESL) முழு அங்கத்துவம்/ உறுப்பினராக இருத்தல்.

வயது - 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

(இ) **பொறியியல் தொழில்நுட்பம் (கப்பல் கட்டுமான)**

பதவிநிலை - லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகத்தில் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் அல்லது நேவல் ஆர்க்கிடக்சரில் நான்கு வருட முழுநேரப் பட்டப்படிப்பு.

இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனம் (IESL) முழு அங்கத்துவம்/ உறுப்பினராக இருத்தல்.

வயது - 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

(ஈ) **வாகன பொறியியல்**

பதவிநிலை - லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகத்தில் நான்கு வருட இயந்திர பொறியியல் முழுநேரப் பட்டப்படிப்பு.

இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனம் (IESL) முழு அங்கத்துவம்/ உறுப்பினராக இருத்தல்.

வயது - 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

(உ) **வழங்கல் பிரிவு**

பதவிநிலை - துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - இலங்கை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் வர்த்தக முகாமைத்துவம், வர்த்தகம், கணக்கியல், வர்த்தக பொருளாதாரம், சொத்து நிர்வாகம் மற்றும் மதிப்பீடு ஆகியவற்றில் விசேட பட்டம் பெற்றவர்.

வயது - 30 வயதுக்கு குறைவாக இருத்தல்.

(ஊ) **மின் மற்றும் மின்னனு பொறியியல் துறை**

பதவிநிலை - லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் மின்சாரம், இலத்திரனியல் அல்லது தொலைத்தொடர்பு ஆகியவற்றில் நான்கு வருட முழுநேரப் பட்டப்படிப்பு.

இலங்கை பொறியியலாளர்கள் கவுன்சில் (ECSL) முழு அங்கத்துவம்/ உறுப்பினராக இருத்தல்.

வயது - 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

(எ) **கட்டுமான பொறியியல்**

பதவிநிலை - லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகத்தில் நான்கு வருட கட்டுமான பொறியியல் முழுநேரப் பட்டப்படிப்பு.

இலங்கை பொறியியலாளர்கள் கவுன்சில் (ECSL) முழு அங்கத்துவம்/ உறுப்பினராக இருத்தல்.

வயது - 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

(ஏ) **பல் மருத்துவ பிரிவு**

பதவிநிலை - வைத்திய லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகத்தில் பல் அறுவை சிகிச்சை பட்டம் (BDS) அல்லது அதற்கு சமமான தகைமையுடன் இலங்கை மருத்துவ சபையில் (SLMC) பதிவு கொண்டிருத்தல்.

வயது - 35 வயதுக்கு குறைவாக இருத்தல்.

(ஐ) **தகவல் தொழிநுட்பப் பிரிவு**

(1) பதவிநிலை - வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - க. பொ. த. (உ./த.) பரீட்சையில் ஆங்கில மொழி மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியடைதல் மற்றும் க. பொ. த. (உ./த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட Red hat தகுதி, சான்றளிக்கப்பட்ட Sun Solaris அல்லது சான்றளிக்கப்பட்ட Ethical Hacker ஆக இருத்தல் வேண்டும்.

வயது - 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

(2) பதவிநிலை - துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அல்லது அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் மூன்று வருட (03) கணினி அறிவியல் அல்லது தகவல் தொழிநுட்பத்தில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட சமமான தகுதியை பெற்றிருத்தல்.

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் தகவல் தொழிநுட்பத் துறையில் மென்பொருள் பொறியியலாளர், வன்பொருள் பொறியியலாளர், தரவு நிர்வாகி, நெட்வொர்க் நிர்வாகி அல்லது தகவல் தொழிநுட்ப விரிவுரையாளர் அல்லது தகவல் தொழிநுட்ப துறையில் கடற்படைத் தலைமை அதிகாரியின் திருப்திக்கு குறைந்தபட்சம் ஒரு வருட அனுபவம்.

வயது - 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

(3) பதவிநிலை - லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க பல்கலைக்கழகத்தில் அல்லது அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தால் நான்கு ஆண்டு கணினி அறிவியல் அல்லது தரவு அறிவியல் அல்லது இயந்திரவியல் கற்பித்தலுடன் பொறியியல் துறையில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

தகவல் தொழிநுட்பம் அல்லது இயந்திர கற்பித்தல் தொடர்பான குறைந்தபட்சம் இரண்டு வருட பணி அனுபவம்.

வயது - 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

(ஒ) **மருத்துவ பிரிவு (நுண்ணுயிரியல் நிபுணர்)** - குறுகிய கால அதிகாரிகளுக்கான (நிரந்தர கடற்படை பிரிவு)

பதவிநிலை - வைத்திய கமாண்டர் (ஆண்/பெண்)

தகைமைகள் - சிறப்பு நிபுணராக இலங்கை மருத்துவ கவுன்சிலில் பதிவு செய்யப்பட்டிருத்தல்.

முதுகலை மருத்துவ அறிவியல் நிறுவனத்தால் நுண்ணுயிர் சிறப்பு மருத்துவ அதிகாரி என சான்றளிக்கப்பட்டு இருத்தல்.

வயது - 42 வயதுக்கு குறைவாக இருத்தல்.

(ஓ) **மருத்துவ பிரிவு** - நிர்வாக அதிகாரி சுகாதாரம் (நிரந்தர கடற்படை பிரிவு)

(1) பதவிநிலை - வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் நர்சிங் அல்லது துணை மருத்துவத்தில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

வயது - 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

(2) பதவிநிலை - துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் நர்சிங் அல்லது துணை மருத்துவத்தில் பட்டம் மற்றும் மருத்துவமனை அல்லது மருத்துவத் துறையில் குறைந்தபட்சம் ஒரு வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயது - 32 வயதுக்கு குறைவாக இருத்தல்.

(ஔ) **இசைக்குழுப் பிரிவு** - இசை

(1) பதவிநிலை - வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ஆண் விண்ணப்பதாரிகள் மட்டும்)

தகைமைகள் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் இசையில் கலைநிகழ்ச்சியில் சிறப்புப் பட்டம் மற்றும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் இசையில் நுண்கலை சிறப்புப் பட்டம் மற்றும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் இசையில் இளங்கலை பட்டப்படிப்பு முதல் தர சித்தி பெற்றிருக்க வேண்டும்.

மேலதிக தகைமையும் - மேற்கத்திய/இந்திய இசை தொடர்பாக பயின்றுள்ள ஏனைய பாடநெறிகள்

செயன்முறை பரீட்சையும் தொடர்புடைய துறையில் பெற்றுள்ள வேறேதேனும் சாதனைகள்

தேசிய மற்றும் சர்வதேச அளவிலான இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்பு மற்றும் சாதனைகள்.

கடற்படை இசைக்குழுவினால் நடத்தப்படும் நடைமுறைப் பரீட்சையை வெற்றிகரமாக முடித்த பின்னர் தகுதியான விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். அனைத்து விண்ணப்பதாரர்களும் தகுதிக்கான நடைமுறைத் தேர்வில் கலந்துகொள்வது கட்டாயமாகும்.

வயது - 26 வயதுக்கு குறைவாக இருத்தல்.

(2) பதவிநிலை - வேலை பார்க்கும் லெப்டினன்ட் (ஆண் விண்ணப்பதாரிகள் மட்டும்)

தகைமைகள் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் இசையில் கலை நிகழ்ச்சியில் சிறப்புப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் இசையில் நுண்கலை சிறப்புப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் இசையில் இளங்கலை பட்டப்படிப்பு பெற்றிருக்க வேண்டும்.

மேலதிக தகைமையும் - மேற்கத்திய/இந்திய இசை தொடர்பாக பயின்றுள்ள ஏனைய பாடநெறிகள்

செயன்முறை பரீட்சையும் தொடர்புடைய துறையில் பெற்றுள்ள வேறேதேனும் சாதனைகள்

தேசிய மற்றும் சர்வதேச அளவிலான இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்பு மற்றும் சாதனைகள்.

கடற்படை இசைக்குழுவினால் நடத்தப்படும் நடைமுறைப் பரீட்சையை வெற்றிகரமாக முடித்த பின்னர் தகுதியான விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். அனைத்து விண்ணப்பதாரர்களும் தகுதிக்கான நடைமுறைத் தேர்வில் கலந்துகொள்வது கட்டாயமாகும்.

வயது - 26 வயதுக்கு குறைவாக இருத்தல்.

(க) **நிறைவேற்றுப் பிரிவு** - (தொண்டர் கடற்படைப் பிரிவு)

(1) பதவிநிலை - வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ஆண்)

தகைமைகள் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் பொது பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

வயது - 30 வயதுக்கு குறைவாக இருத்தல்.

(ங) **கால்நடை மருத்துவர்** - (தொண்டர் கடற்படை பிரிவு)

பதவிநிலை - லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் கால்நடை மருத்துவத்தில் (BVSc) பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

இலங்கை கால்நடை மருத்துவ சபையின் நிரந்தர உறுப்புரிமை.

வயது - 35 வயதுக்கு குறைவாக இருத்தல்.

(ச) **கணக்கு அதிகாரி** - (தொண்டர் கடற்படை பிரிவு)

பதவிநிலை - வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - உயிரியல் விஞ்ஞானம் அல்லது உயிரியல் பாடத்தின் கீழ் க. பொ. த. (உ./த.) தேர்வில் கணக்கியலை ஒரு பாடமாக படித்திருக்க வேண்டும்.

மற்றும்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் கணக்கியலில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

வயது - 30 வயதுக்கு குறைவாக இருத்தல்.

(ஞ) **ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அதிகாரி** - (தொண்டர் கடற்படை பிரிவு)

**ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அதிகாரி-இயந்திர பொறியியலில் அதிகாரி** - (தொண்டர் கடற்படை பிரிவு)

பதவிநிலை - லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் இயந்திர பொறியியலில் இளங்கலை அறிவியலில் (BSc Eng (Hons) பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் கூடுதல் தகுதியாகக் கருதப்படும்.

தொழிநுட்ப திறன்கள் - மெக்கானிகள் பாகங்கள்/அமைப்புகளை வடிவமைத்து மாடலிங் செய்வதற்கான CAD மென்பொருளில் (Solid Work, Auto CAD) நிபுணத்துவம்

Material Science பற்றி புரிந்துக்கொள்ள மற்றும் பல்வேறு பயன்பாடுகளுக்கு அவற்றைத் தேர்ந்தெடுக்கும் திறன்.

Finite Element Analysis (FEA) மற்றும் கணினி திரவு இயக்கவியல் (Computer Fluid Dynamics) மாடலிங் ஆகியவற்றில் தேர்ச்சி.

இயந்திர சோதனை மற்றும் உபகரணங்கள் பற்றிய புரிதல்.

முன்மாதிரி கட்டிடம் மற்றும் சோதனை - மெக்கானிகள் இன்ஜினியரிங் துறையில் புதுமைகள் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் திறன் மற்றும் அது தொடர்பான பிரச்சினைகளை தீர்க்கும் திறன்.

இயந்திர வடிவமைப்புகள் மற்றும் கருத்துகளை உருவாக்க மற்றும் முன்மாதிரிகளை உருவாக்கும் திறன்

ஆராய்ச்சி மற்றும் கண்டு பிடிப்புகள் - 3டி பிரிண்டர்கள் (3D Printers), இயந்திரங்கள் மற்றும் சோதனை உபகரணங்கள் உள்ளிட்ட முன்மாதிரி கருவிகள் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்திய அனுபவம். இயந்திர சோதனைகளை வடிவமைத்து நடத்தும் திறன்.

வயது - வயது 21 முதல் 41 வயது வரை இருக்க வேண்டும்.

**ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அதிகாரி-இயந்திர பொறியியலில் அதிகாரி** - (தொண்டர் கடற்படை பிரிவு)

பதவிநிலை - லெப்டினன்ட் கமாண்டர் (ஆண்/பெண்)

தகைமைகள் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் மெக்கானிகல் இன்ஜினியரிங் இளங்கலை (MSc Eng) அல்லது முனைவர் (MPhil) பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் கூடுதல் தகுதியாகக் கருதப்படும்.

தொழிநுட்ப திறன்கள் - மெக்கானிகள் பாகங்கள்/ அமைப்புகளை வடிவமைத்து மாடலிங் செய்வதற்கான CAD மென்பொருளில் (Solid Work, Auto CAD) நிபுணத்துவம்

Material Science பற்றி புரிந்துக்கொள்ள மற்றும் பல்வேறு பயன்பாடுகளுக்கு அவற்றைத் தேர்ந்தெடுக்கும் திறன்.

Finite Element Analysis (FEA) மற்றும் கணினி திரவு இயக்கவியல் (Computer Fluid Dynamics) மாடலிங் ஆகியவற்றில் தேர்ச்சி.

இயந்திர சோதனை மற்றும் உபகரணங்கள் பற்றிய புரிதல்.

முன்மாதிரி கட்டிடம் மற்றும் சோதனை - மெக்கானிகள் இன்ஜினியரிங் துறையில் புதுமைகள் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் திறன் மற்றும் அது தொடர்பான பிரச்சினைகளை தீர்க்கும் திறன். இயந்திர வடிவமைப்புகள் மற்றும் கருத்துகளை உருவாக்க மற்றும் முன்மாதிரிகளை உருவாக்கும் திறன்

ஆராய்ச்சி மற்றும் கண்டு பிடிப்புகள் - 3டி பிரிண்டர்கள் (3D Printers), இயந்திரங்கள் மற்றும் சோதனை உபகரணங்கள் உள்ளிட்ட முன்மாதிரி கருவிகள் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்திய அனுபவம். இயந்திர சோதனைகளை வடிவமைத்து நடத்தும் திறன்.

வயது - வயது 21 முதல் 41 வயது வரை இருக்க வேண்டும்.

**ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அதிகாரி-Mechatronis பொறியியலில்** - (தொண்டர் கடற்படை பிரிவு)

பதவிநிலை - லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் Mechatronics பொறியியலில் சிறப்பு பட்டம் BSc Eng (Hons) பெற்றிருக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் கூடுதல் தகுதியாகக் கருதப்படும்.

தொழிநுட்ப திறன்கள் - இயந்திர சாதனங்கள், மின்னணு சாதனங்கள் கட்டுப்பாடு வழிமுறைகள் (Control Algorithm) மற்றும் மென்பொருளை இணைக்கும் Mechatronic அமைப்புக்களை உருவாக்கும் திறன்.

கட்டுப்பாடு அல்காரிதம்களை (Control Algorithm) வடிவமைதற்காக pythol, C/ C++ அல்லது java போன்ற கணினி மென்பொருளில் தேர்ச்சி.

Embedded System வடிவமைப்பிற்கான Microconroller மற்றும் FPGA குறியீட்டு முறைகளின் நிபுணத்துவம்.

C/ C++, VHDL அல்லது Verilog போன்ற கணினி மொழிகளில் தேர்ச்சி.

OpenCV, Tensor Flow அல்லது Pytoreh போன்ற Computer Vision Libraries மற்றும் Frame Works பயன்பாட்டில் தேர்ச்சி

முன்மாதிரி கட்டிடம் மற்றும் சோதனை - Mechatronic அல்லது ரொபோ பொறியியல் துறையில் புதுமைகள் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் திறன் மற்றும் அது தொடர்பான பிரச்சினைகளை தீர்க்கும் திறன்.

புதிய Mechatronics வடிவமைப்புகள் மற்றும் கருத்துகளை உருவாக்க மற்றும் முன்மாதிரிகளை உருவாக்கும் திறன்.

ஆராய்ச்சி மற்றும் கண்டு பிடிப்புகள் - 3டி பிரிண்டர்கள் (3D Printers), இயந்திரங்கள் மற்றும் சோதனை உபகரணங்கள் உள்ளிட்ட முன்மாதிரி கருவிகள் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்திய அனுபவம்.

இயந்திர சோதனைகளை /வடிவமைத்து நடத்தும் திறன்.

வயது - வயது 21 முதல் 41 வயது வரை இருக்க வேண்டும்.

**ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அதிகாரி-Mechatronis பொறியியலில்** - (தொண்டர் கடற்படைப் பிரிவு)

பதவிநிலை - லெப்டினன்ட் கமாண்டர் (ஆண்/பெண்)

தகைமைகள் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் Mechatronics மெக்கானிகல் இன்ஜினியரிங் இளங்கலை (MSc Eng) அல்லது முனைவர் (MPhil) பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் கூடுதல் தகுதியாகக் கருதப்படும்.

தொழிநுட்ப திறன்கள் - இயந்திர சாதனங்கள், மின்னணு சாதனங்கள் கட்டுப்பாடு வழிமுறைகள் (Control Algorithm) மற்றும் மென்பொருளை இணைக்கும் Mechatronic அமைப்புக்களை உருவாக்கும் திறன்.

கட்டுப்பாடு அல்காரிதம்களை (Control Algorithm) வடிவமைதற்காக pythol, C/ C++ அல்லது java போன்ற கணினி மென்பொருளில் தேர்ச்சி.

Embedded System வடிவமைப்பிற்கான Microconroller மற்றும் FPGA குறியீட்டு முறைகளின் நிபுணத்துவம்.

C/ C++, VHDL அல்லது Verilog போன்ற கணினி மொழிகளில் தேர்ச்சி.

OpenCV, Tensor Flow அல்லது Pytoreh போன்ற Computer Vision Libraries மற்றும் Frame Works பயன்பாட்டில் தேர்ச்சி

முன்மாதிரி கட்டிடம் மற்றும் சோதனை - Mechatronic அல்லது ரொபோ பொறியியல் துறையில் புதுமைகள் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் திறன் மற்றும் அது தொடர்பான பிரச்சினைகளை தீர்க்கும் திறன்.

புதிய Mechatronics வடிவமைப்புகள் மற்றும் கருத்துகளை உருவாக்க மற்றும் முன்மாதிரிகளை உருவாக்கும் திறன்.

ஆராய்ச்சி மற்றும் கண்டு பிடிப்புகள் - 3டி பிரிண்டர்கள் (3D Printers), இயந்திரங்கள் மற்றும் சோதனை உபகரணங்கள் உள்ளிட்ட முன்மாதிரி கருவிகள் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்திய அனுபவம்.

இயந்திர சோதனைகளை /வடிவமைத்து நடத்தும் திறன்.

வயது - வயது 21 முதல் 41 வயது வரை இருக்க வேண்டும்.

(ட) **தகவல் தொழிநுட்ப பிரிவு**- Ethical Hacking Officer (தொண்டர்)

(1) பதவிநிலை - லெப்டினன்ட் Ethical Hacking Officer (ஆண் விண்ணப்பதாரிகள் மட்டும்)

தகைமைகள் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் அல்லது அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தால் நான்கு ஆண்டு சைபர் பாதுகாப்பு அல்லது தகவல் பாதுகாப்பில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

Ethical Hacking சம்பந்தமாக உலகில் அங்கீகரிக்கப்பட்ட Certified Ethical Hacker (CEH)/ Certified Information Systems Security Professional (CISSP)/ Offensive Security Certified Professional (OSCP)/ Certified Penetration Testing Engineer (CPTE) படிப்புகளில் ஒன்றைப் பெற்று இருத்தல்.

சைபர் பாதுகாப்பு மற்றும் தகவல் தொழிநுட்பம் பிரிவில் VPT உட்பட குறைந்தபட்சம் இரண்டு வருட அனுபவம்.

சைபர் பாதுகாப்புத் திட்டங்கள், திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சிகளுக்கு நேரடியாக பங்களித்த அதில் நன்கு தேர்ச்சி பெற்றவர்.

சிறந்த வாய்மொழி மற்றும் எழுதப்பட்ட தொடர்பு மற்றும் தனிப்பட்ட திறன்கள், பல்வேறு நிலைகளில் உள்ள நபர்களுக்கு சைபர் பாதுகாப்பு தலைப்புகளை விளக்குவதில் நிபுணத்துவம் இருத்தல்.

பல்வேறு சூழ்நிலைகளில் Penetration Tests மற்றும் Vulnerability Assessments செய்வதில் அனுபவம்.

Ethical Hacking முறைகள் Tools மற்றும் Frameworks பற்றி நன்கு அறிந்திருத்தல்.

Network Protocols, Systems Administration, தகவல் பாதுகாப்பின் உயர்நிலை பயன்பாடுகள் ஆகியவற்றின் வலுவான புதிதல் மற்றும் நடைமுறை பயன்பாடு.

பொதுவான பாதுகாப்பு பாதிப்புகளைக் (Common Security Vulnerabilities) குறைப்பதற்கான வழிகளைப் பற்றி நன்கு புரிந்திருத்தல்.

பல்வேறு இயக்க முறைமைகளின் (உதா : Windows, Linux) தேர்ச்சி.

வயது - 32 வயதுக்கு குறைவாக இருக்க வேண்டும்.

(2) பதவிநிலை - லெப்டினன்ட் கமாண்டர் Ethical Hacking Officer (ஆண் விண்ணப்பதாரிகள் மட்டும்)

தகைமைகள் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் சைபர் பாதுகாப்பு (Cyber Security) அல்லது தகவல் பாதுகாப்பு (Information Security) தொடர்பான வித்யாச பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

Ethical Hacking சம்பந்தமாக உலகில் அங்கீகரிக்கப்பட்ட Certified Ethical Hacker (CEH)/ Certified Information Systems Security Professional (CISSP)/ Offensive Security Certified Professional (OSCP)/ Certified Penetration Testing Engineer (CPTE) படிப்புகளில் ஒன்றைப் பெற்று இருத்தல்.

சைபர் பாதுகாப்பு மற்றும் தகவல் தொழிநுட்பம் பிரிவில் குறைந்தபட்சம் இரண்டு வருட அனுபவம்.

சைபர் பாதுகாப்புத் திட்டங்கள், திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சிகளுக்கு நேரடியாக பங்களித்த அதில் நன்கு தேர்ச்சி பெற்றவர்.

சிறந்த வாய்மொழி மற்றும் எழுதப்பட்ட தொடர்பு மற்றும் தனிப்பட்ட திறன்கள், பல்வேறு நிலைகளில் உள்ள நபர்களுக்கு சைபர் பாதுகாப்பு தலைப்புகளை விளக்குவதில் நிபுணத்துவம் இருத்தல்.

பல்வேறு சூழ்நிலைகளில் Penetration Tests மற்றும் Vulnerability Assessments செய்வதில் அனுபவம்.

Ethical Hacking முறைகள் Tools மற்றும் Frameworks பற்றி நன்கு அறிந்திருத்தல்.

Network Protocols, Systems Administration, தகவல் பாதுகாப்பின் உயர்நிலை பயன்பாடுகள் ஆகியவற்றின் வலுவான புதிதல் மற்றும் நடைமுறை பயன்பாடு.

பொதுவான பாதுகாப்பு பாதிப்புகளைக் (Common Security Vulnerabilities) குறைப்பதற்கான வழிகளைப் பற்றி நன்கு புரிந்திருத்தல்.

பல்வேறு இயக்க முறைமைகளின் (உதா : Windows, Linux) தேர்ச்சி.

வயது - 35 வயதுக்கு குறைவாக இருத்தல்.

5. **ஏனைய தகைமைகள் :**

விண்ணப்பதாரிகள் (ஆண்/பெண்) இலங்கை நிரந்தர /தொண்டர் கடற்படைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பின்வரும் பொது நிபந்தனைகள் கட்டாயம் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

அ. தேசிய இனம் - இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ஆ. வயது - விண்ணப்பங்கள் கோரப்படும் கடைசி திகதியில் அந்தந்தப் பிரிவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வயது இருத்தல் வேண்டும்.

இ. உயரம் - ஆண் - 66 அங்குலங்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.
- பெண் - 63 அங்குலங்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

ஈ. நிறை - ஆண் - 52 கிலோகிராம்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.
- பெண் - 41 கிலோகிராம்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

உ. மார்பு - ஆண் - 32 அங்குலங்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

ஊ. பார்வை நிறம் - எஸ்ரிஈ II (உரிய பார்வை)

எ. பார்வைத் திறன் - இடக் கண்ணில் 6/6 மற்றும் வலக் கண்ணில் 6/6 (மூக்குக்கண்ணாடி மற்றும் தொடர்பு வில்லைகள் இன்றி)
(மருத்துவ துறைக்காக 6/ 12 கண்வில்லைகள் மூலம் 6/ 6 சரி செய்யப்பட்ட நபர்கள் பரிசீலிக்கப்படலாம்)

ஏ. சிவில் அந்தஸ்து - திருமணமானவர்/திருமணமாகாதவர்

6. விளையாட்டுத் துறையில் காட்டிய சிறந்த சாதனைகள் மீது முக்கிய கவனம் செலுத்தப்படும் என்பதுடன், ஏற்கனவே அரசாங்க/தனியார் துறையில் தொழிலில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் மீது விசேட முன்னுரிமை வழங்கப்படும்.

7. மேலே 3, 4 மற்றும் 5 ஆம் பந்திகளில் காட்டப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. **சேவை நிபந்தனைகள் :**

அ. விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தர /தொண்டர் கடற்படை ஆண்/பெண் உத்தியோகத்தர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள் என்பதுடன், அவர்கள் அடிப்படை பயிற்சி நெறிகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

ஆ. இலங்கை கடற்படை தளபதியின் தீர்மானத்திற்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற ஆண்/ பெண் உத்தியோகத்தர்கள் இலங்கையின் எப்பாகத்திலேனும் அல்லது வெளிநாட்டில் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

இ. அனைத்து உத்தியோகத்தர்களும் (ஆண்/ பெண்) கடமை நிமித்தம் அல்லது பயிற்சிக்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உலகின் எந்தவொரு நாட்டிற்கும் இணைக்கப்படுவதற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

ஈ. பயிற்சிக் காலத்தின்போதும், அதன் பின்னரும் எல்லா ஆண்/பெண் உத்தியோகத்தர்களும் இலங்கை கடற்படைச் சட்டம், கடற்படை உத்தரவுகள் மற்றும் குறிப்புகள் மூலம் அமுல்படுத்தப்படும் விதிகள், ஒழுங்குமுறைகள், இங்கு விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

உ. பயிற்சிக் காலப்பகுதியில் எவரேனும் உத்தியோகத்தர் (ஆண்/ பெண்) ஒருவருக்கு தமது அபேட்சகத்துவத்தை சுயவிருப்பின் பேரில் இடைநிறுத்திக்கொள்வதற்குத் தேவைப்படின், அவ் உத்தியோகத்தர் சார்பில் இலங்கை அரசாங்கத்தினால் அதுவரை ஏற்க நேரிட்ட அனைத்துச் செலவுகளையும் அரசாங்கத்திற்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

ஊ. பயிற்சிக் காலப்பகுதியில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவரேனும் (ஆண்/பெண்) உத்தியோகத்தரொருவரின் தவறான நடத்தை காரணமாக அல்லது அவர் பொறுப்புக்கூற வேண்டிய ஏதேனும் காரணி காரணமாக அதிகார ஆணை வழங்கப்படுவதற்கு அவர் தகைமையற்றவர் என அதிகாரிகளினால் தீர்மானிக்கப்பட்டால், அவ் உத்தியோகத்தர் சார்பில் அதுவரை ஏற்க நேரிட்ட அனைத்துச் செலவுகளையும் அச்சந்தர்ப்பத்திலேயே இலங்கை அரசுக்குத் திருப்பிச் செலுத்தவதற்கு இணங்குவதாக, இலங்கை அரசின் பிரதிநிதி என்ற வகையில் இலங்கை கடற்படைத் தளபதியுடன் உடன்படிக்கையொன்றிற்கும், பிணை முறியொன்றுக்கும் கைச்சாத்திடுதல் வேண்டும்.

எ. பயிற்சிக காலப்பகுதியில் ஆண்/பெண் உத்தியோகத்தரகளுக்கு இலங்கை கடற்படை இல்லங்களிலிருந்து தங்குமிட வசதிகளும், உணவும் வழங்கப்படும்.

ஏ. வெற்றிடமாகவுள்ள திருமணமானவர்களுக்கான இல்லங்களை அடிப்படையாகக் கொண்டு திருமணமான ஆண்/பெண் உத்தியோகத்தர்களுக்கு இல்லங்கள் வழங்கப்படும். இதற்கான இல்ல வாடகை அரச ஊழியர்களுக்கு ஏற்புடையவாறு அறவிடப்படும்.

9. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்.-** தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள், 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் பிரகாரம் மொழிக் கொள்கையை அமுல் செய்யும் பொருட்டு ஆக்கப்பட்டுள்ள மற்றும் இதனகத்துப் பின்னர் ஆக்கப்படக்கூடிய ஒழுங்குவிதிகள் மற்றும் உறுப்புரைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

10. **சம்பளம் மற்றும் படிகள் :**

பல் மருத்துவ அதிகாரிகளுக்கான படிகள்

2020.01.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் வெளியிடப்பட்டுள்ள 03/2016 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**நுண்ணுயிரியல் நிபுணர்**

| விபரம் | தரம் | லெப்டினன்ட் (ரூ.) | லெப்டினன்ட் கமாண்டர் (ரூ.) | கமாண்டர் (ரூ.) |
|---|---|---|---|---|
| அடிப்படைச் சம்பளம் | சிறப்பு தரம் | 88,000.00 | 88,000.00 | 88,000.00 |
| வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | - | 17,800.00 | 17,800.00 | 17,800.00 |
| சீருடைக் கொடுப்பனவு | - | 525.00 | 525.00 | 525.00 |
| இடைக்கால கொடுப்பனவு | - | 1,000.00 | 1,000.00 | 1,000.00 |
| சிறப்பு கூடுதல் சலுகை | - | 3,000.00 | 3,000.00 | 3,000.00 |
| இடைக்கால கொடுப்பனவு - 2022 | - | 5,000.00 | 5,000.00 | 5,000.00 |
| சீர்குலைந்த வருகை மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு | சிறப்பு தரம் | 70,000.00 | 70,000.00 | 70,000.00 |
| ஓய்வூதியத்துடன் கூடிய கொடுப்பனவு | சிறப்பு தரம் | 3,400.00 | 3,400.00 | 3,400.00 |
| சிறப்பு கூடுதல் சலுகை (வைத்திய அதிகாரி) | சிறப்பு தரம் | 1,500.00 | 1,500.00 | 1,500.00 |
| உணவுக் கொடுப்பனவு | - | 34,800.00 | 34,800.00 | 34,800.00 |
| | **மொத்தம்** | **225,025.80** | **225,025.80** | **225,025.80** |

**பல் மருத்துவ துறைக்கான ஊதியம்**

| விபரம் | தரம் | துணை லெப்டினன்ட் (ரூ.) | லெப்டினன்ட் (ரூ.) | லெப்டினன்ட் கொமாண்டர் (ரூ.) |
|---|---|---|---|---|
| அடிப்படைச் சம்பளம் | பல் மருத்துவம் தரம் II | 52,955.00 | 88,000.00 | 88,000.00 |
| வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | - | 17,800.00 | 17,800.00 | 17,800.00 |
| சீருடைக் கொடுப்பனவு | - | 525.00 | 525.00 | 525.00 |
| இடைக்கால கொடுப்பனவு | - | 1,000.00 | 1,000.00 | 1,000.00 |
| சிறப்பு கூடுதல் சலுகை | - | 3,000.00 | 3,000.00 | 3,000.00 |
| இடைக்கால கொடுப்பனவு - 2022 | - | 5,000.00 | 5,000.00 | 5,000.00 |
| சீர்குலைந்த வருகை மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு | பல் மருத்துவம் தரம் II | 70,000.00 | 70,000.00 | 70,000.00 |
| ஓய்வூதியத்துடன் கூடிய கொடுப்பனவு | பல் மருத்துவம் தரம் II | 1,700.00 | 3,400.00 | 3,400.00 |

| விபரம் | தரம் | துணை லெப்டினன்ட் (ரூ.) | லெப்டினன்ட் (ரூ.) | லெப்டினன்ட் கொமாண்டர் (ரூ.) |
|---|---|---|---|---|
| ஓய்வூதியம் இல்லாமல் கொடுப்பனவு | பல் மருத்துவம் தரம் II | 1,700.00 | 2,125.00 | 2,125.00 |
| சிறப்பு கூடுதல் சலுகை (பல் வைத்திய அதிகாரி) | பல் மருத்துவம் தரம் II | 1,500.00 | 1,500.00 | 1,500.00 |
| உணவுக் கொடுப்பனவு | - | 34,800.00 | 34,800.00 | 34,800.00 |
| | **மொத்தம்** | **189,980.00** | **189,980.00** | **189,980.00** |

மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் தவிர அனைத்து துறைகளுக்கும் ஊதியம்

| விபரம் | வேலை பார்க்கும் துணை லெப்டினன்ட் (ரூ.) | துணை லெப்டினன்ட் (ரூ.) | லெப்டினன்ட் (ரூ.) | லெப்டினன்ட் கமாண்டர் (ரூ.) | கமாண்டர் (ரூ.) |
|---|---|---|---|---|---|
| அடிப்படைச் சம்பளம் | 41,905.00 | 47,615.00 | 55,625.00 | 60,965.00 | 62,595.00 |
| வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | 17,800.00 | 17,800.00 | 17,800.00 | 17,800.00 | 17,800.00 |
| சீருடைக் கொடுப்பனவு | 525.00 | 525.00 | 525.00 | 525.00 | 525.00 |
| சிரம கொடுப்பனவு | 600.00 | 600.00 | 600.00 | 600.00 | 1,000.00 |
| இடைக்கால கொடுப்பனவு | 1,000.00 | 1,000.00 | 1,000.00 | 1,000.00 | 600.00 |
| சிறப்பு கூடுதல் சலுகை | 3,000.00 | 3,000.00 | 3,000.00 | 3,000.00 | 3,000.00 |
| இடைக்கால கொடுப்பனவு - 2022 | 5,000.00 | 5,000.00 | 5,000.00 | 5,000.00 | 5,000.00 |
| உணவுக் கொடுப்பனவு | 34,800.00 | 34,800.00 | 34,800.00 | 34,800.00 | 34,800.00 |
| **மொத்தம்** | **104,676.80** | **110,340.00** | **118,350.00** | **123,690.00** | **125,320.00** |

11. **பயிற்சியின் போதும் அதற்கு பின்னரும் உள்ள வசதிகள், கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகள் :**

அ. வெளியிலிருந்து உணவினை பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் உணவுக் கொடுப்பனவு வழங்கப்படும்.

ஆ. ஏற்புடையவிடத்து தகைமைக் கட்டணமாக மாதமொன்றுக்கு அதிகபட்சம் ரூபா 637.50 வரை வழங்கப்படும்.

இ. இலவசமாக ரயிலில் பயணிப்பதற்கான விடுமுறை இரயில்வே அனுமதிகளின் மூன்று தொகுப்புக்கள் (உத்தியோகத்தர் (ஆண்/ பெண்), வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் அவரை சார்ந்திருப்பவர்களுக்கு பொருந்தும்) உண்டு.

ஈ. முகாமில் தங்கியிருக்கும் உத்தியோகத்தர்களுக்கு (ஆண்/பெண்) மாதத்தில் ஒரு தடவை வீட்டிற்கு செல்வதற்கும், சென்று வருவதற்கும் ஒரு சோடி கடமை நிமித்தமான புகையிரத ஆணைச்சீட்டுகள் வழங்கப்படும் அல்லது பேரூந்துக் கட்டணம் செலுத்தப்படும்.

உ. சீருடை மற்றும் அதனுடன் இணைந்த துணைப்பொருட்கள் இலவசமாக வழங்கப்படும்.

ஊ. இலவச மருத்துவ வசதிகள் வழங்கப்படும். (உத்தியோகத்தர், வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் அவரை சார்ந்திருப்பவர்களுக்கு பொருந்தும்).

எ. திருமணமானவர்கள் அரசாங்க இல்லமொன்றில் தங்குமிட வசதிகளைப் பெற்றுக்கொள்ளாத திருமணமான ஆண்/பெண் உத்தியோகத்தர்கள் ரூபா 3,200.00 தொடக்கம் ரூபா 8,500.00 வரையான வீட்டு வாடகைப் படிக்கு உரித்துடையவர்களாவர்.

12. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள் :**

அ. விண்ணப்பங்கள் கீழ்க் காட்டப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்களை, 2024, நவெம்பர் மாதம் 04 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர் (ஆட்சேர்ப்பு), இலங்கை கடற்படை தலைமையகம், த.பெ. எண் 593, கொழும்பு 01" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பம் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், "நேரடி நுழைவு 2024/02 - நிரந்தர/தொண்டர் ஆண்/பெண் உத்தியோகத்தர்கள்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு www.navy.lk எனும் இணையத்தளத்திற்குள் பிரவேசிக்கவும் அல்லது 011-7195120 /011-7195154 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

ஆ. நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அறிவிக்கப்படாது. எந்தவொரு விண்ணப்பமும் தொலைந்துவிட்டதாகவோ அல்லது பதிவு தபாலில் தாமதமாகிவிட்டதாக எந்தவொரு புகாரும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்கள் பெறப்படுவதற்கான எந்தவொரு அறிவிப்பும் செய்யப்படமாட்டாது.

இ. அரசாங்க சேவையிலுள்ள (திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், சிவில் நிறுவனங்கள்) விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள், விண்ணப்பதாரி தெரிவுசெய்யப்பட்டால் விடுவிக்கப்படுவார் எனும் அத்தாட்சிப்படுத்தல் கடிதம் நிறுவனத்தலைவர் ஊடாக (திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், சிவில் நிறுவனங்கள்) சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

ஈ. விண்ணப்பதாரிகள், நேர்முகப்பரீட்சையின்போது அல்லது வேறேதேனும் சந்தர்ப்பத்தில் கீழ்க் காட்டப்பட்ட ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பங்களை அனுப்பும்போது அவ் ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகளை இணைத்து அனுப்புதலும் வேண்டும்.

(1) பிறப்புப் பதிவுச்சான்றிதழ்.
(2) விண்ணப்பித்த பிரிவிற்காக தேவைப்படுத்தப்பட்ட கல்வி/ உயர்கல்வி/ தொழிற்கல்வி/ பட்டத்தகைமைகள் மற்றும் முதுகலைப் பட்டம் பற்றிய சான்றிதழ்கள்.
(3) பாடசாலையிலிருந்து பெற்றுக்கொண்ட பாடசாலை விடுகைப்பத்திரம் மற்றும் குணநலச்சான்றிதழ்.
(4) ஆறு மாத காலத்திற்குள் பெற்றுக்கொண்ட கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ்.
(5) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்றுக்கொண்ட தொழில்/தொழில்நுட்ப அனுபவச் சான்றிதழ் (ஏதாவது இருப்பின்).
(6) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு குணநலச்சான்றிதழ்கள் (இரண்டு வருடங்களுக்கு மேல் விண்ணப்பதாரியை நன்கு அறிந்து வைத்திருக்கும் பொறுப்புவாய்ந்த நபரொருவரிடமிருந்து அல்லது தற்போதைய தொழில்தருநரிடமிருந்து).
(7) விளையாட்டுத்துறைசார் செயற்பாடுகள் மற்றும் ஏனைய தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்.

உ. கோரப்படும்போது மேற்கூறப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

ஊ. வேறு ஆவணங்களோ அல்லது ஆவணங்களின் மூலப்பிரதிகளோ விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படுதல் ஆகாது.

எ. விண்ணப்பத்துடன் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை அனுப்பிவைத்து அவை காணாமல் போகுமாயின், இலங்கை கடற்படை பொறுப்பேற்காது.

13. விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ள ஏதேனும் கூற்று பொய்யானதென கண்டறியப்பட்டால், அப் பொய்யான கூற்று தெரிவிற்கு முன்னர் தெரியவரும் பட்சத்தில் அவ்விண்ணப்பதாரி தகைமையிழப்பிற்கு ஆளாவார். தெரிவின் பின் தெரியவரும் பட்சத்தில் அவ்விண்ணப்பதாரி தண்டனையுடன் பதவி நீக்கத்திற்கு ஆளாவார்.

14. **தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் :**

அ. மேற்குறிப்பிடப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் (ஆண்/ பெண்) அடிப்படை நேர்காணலுக்குத் தோன்றும் போது உயரம், வயது, கண்பார்வை மற்றும் எடை ஆகியவற்றை சரிபார்க்க ஆரம்ப மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள உயரம், வயது, பார்வை மற்றும் எடை ஆகியவற்றை பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரர்கள் நேர்காணலுக்கு உட்படுத்தப்படமாட்டார்கள். விண்ணப்பதாரரின் உயரம் மற்றும் வயது தேவைகளுக்கு ஏற்ப இல்லாவிட்டாலும் கடற்படை சேவைக்கு பயனுள்ள சிறப்பு திறன் இருந்தால் அவர் சேவை தேவையின் அடிப்படையில் கடற்படைத் தளபதியின் ஒப்புதலுடன் பரிசீலிக்கப்படுவார். அடிப்படை நேர்காணலில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்கள் மட்டுமே பின்வரும் உடல் தகுதித் தேர்வுக்கு சமர்ப்பிக்கப்படுவார்கள்.

ஆ. உடற் தகைமை பரிசோதனையில் சித்தியெய்துவதற்கான தேவைப்பாடுகள்

| நிகழ்வுகள் | முறை | | காலம் | |
|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1600 மீற்றர் ஓட்டம் (நிமிடங்கள்) | - | - | நிமிடங்கள் 09 | நிமிடங்கள் 11 |
| Push ups | 12 அல்லது அதிகமாகவோ | 08 அல்லது அதிகமாகவோ | நிமிடங்கள் 01 | நிமிடங்கள் 01 |
| Sit ups/Curl ups | 10 அல்லது அதிகமாகவோ | 07 அல்லது அதிகமாகவோ | நிமிடங்கள் 01 | நிமிடங்கள் 01 |

இ. உடற் தகைமை பரிசோதனையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் மட்டும் இலங்கை கடற்படை வைத்தியசாலை மூலம் நடாத்தப்படுகின்ற முழுமையான மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். முழுமையான மருத்துவ பரிசோதனையில் சித்தியடைவோர் இரண்டாவது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். இரண்டாவது நேர்முகப் பரீட்சையில் சித்தியெய்தும் விண்ணப்பதாரிகள் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் மட்டும் நிலவும் வெற்றிடங்களுக்கு அமைய தெரிவுசெய்யப்படுவர்.

ஈ. ஆட்சேர்ப்புக்குத் தகைமை பெறாத விண்ணப்பதாரிகளுக்கு அது பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

உ. நேர்முகப்பரீட்சைக்கு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு (ஆண்/பெண்), நேர்முகப்பரீட்சை நடைபெறும் திகதி, நேரம் மற்றும் இடம் என்பன பற்றி வட்ஸ்அப் செயலி (WhatsApp) ஊடாக மட்டுமே அறிவிக்கப்படும் என்பதுடன், எழுத்துமூலமான தகவல்கள் எதுவும் தபால் மூலம் அறிவிக்கப்படமாட்டாது. நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவது தொடர்பாக பிரயாணச் செலவுகளோ அல்லது வேறு படிகளோ செலுத்தப்படமாட்டாது.

ஊ. நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் இலங்கை கடற்படை மருத்துவ சபையின் முன்பாக தோன்ற வேண்டும்.

எ. விண்ணப்பதாரியொருவர் (ஆண்/பெண்), நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தனது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

ஏ. விண்ணப்பதாரியொருவரை (ஆண்/பெண்), பரிந்துரை செய்ய விரும்பும் எவரும் அவருக்கு நற்சான்றிதழ் ஒன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். விண்ணப்பதாரியொருவரைத் தெரிவுசெய்வதில் எந்தவொரு வடிவிலான வலியுறுத்தல் அல்லது செல்வாக்கு செலுத்த முயற்சித்தல் என்பவை அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையிழக்கச் செய்யும்.

ஐ. விண்ணப்பதாரிகளினால் (ஆண்/பெண்) சமர்ப்பிக்கப்படுகின்ற கல்வி மற்றும் தொழிற்தகைமை சான்றிதழ்களின் செல்லுபடித் தன்மை பரீட்சைகள் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன் உறுதிசெய்யப்படும்.

ஒ. எல்லா விண்ணப்பதாரிகளினதும் பாதுகாப்பு இசைவு அறிக்கைகள் (Reports on security clearance) கடற்படைத் தலைமையகத்தினால் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.

15. இலங்கை கடற்படை கட்டளைத்தளபதி, இலங்கை கடற்படையில் நேரடி நுழைவு அலுவலர்கள் (ஆண்/ பெண்) ஆட்சேர்ப்பு செய்கின்ற செயன்முறையின் இறுதித் தீர்மானங்களை மேற்கொள்கின்ற தத்துவத்தை கொண்டிருப்பதுடன், தேசிய பாதுகாப்பு மற்றும் இலங்கை கடற்படையின் நிர்வாகம்சார் தேவைப்பாடுகள் ஆகியவற்றுக்கேற்ப இலங்கை கடற்படை கட்டளைத் தளபதி மேற்படி தேவைப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றுவதற்கான இறுதித் தீர்மானம் மேற்கொள்கின்ற தற்றுணிவினைக் கொண்டிருப்பார்.

***குறிப்பு***: இவ் வர்த்தமானி அறிவித்தலானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்படுகின்றது. இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின் சிங்கள உரையே மேலோங்கி நிற்கும்.

யூவீஎம்பி பெரேரா, ஆர்எஸ்பீ, யூஎஸ்பி, என்டீயூ, பிஎஸ்சீ
துணை அட்மிரால்
இலங்கை கடற்படைத் தளபதி.

இலங்கை கடற்படைத் தலைமையகம்,
த.பெ. எண் 593,
கொழும்பு 01.

**இலங்கைக் கடற்படை - தொண்டர் கடற்படையில் ஆண்/பெண் நேரடி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பப்படிவம்**

தேசிய இனம் :......................................................................................................................................

(பரம்பரை மூலமா அல்லது பதிவின் மூலமா இலங்கைப் பிரசை என்பதைக் குறிப்பிடவும். பதிவின் மூலமாயின் பதிவுச் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடவும்)

விண்ணப்பிக்கும் பிரிவு/பதவி :......................................................................................................

முழுப்பெயர் (தேசிய அடையாள அட்டையில் உள்ளவாறு) :..................................................................

தேசிய அடையாள அட்டை இலக்கம் :..............................................................................................

நிரந்தர முகவரி :............................................................................................................................

தபால் முகவரி :..............................................................................................................................

மின்னஞ்சல் முகவரி :......................................................................................................................

பிறந்த திகதி :................................................................................................................................

வயது: வருடங்கள் :.............................. மாதங்கள் : .......................... நாட்கள் :.......................... (2024, நவெம்பர் மாதம் 04 ஆம் திகதிக்கு)

உயரம் :................ (அங்குலம்) மார்பு: .............................. (அங்குலம்) நிறை :................. (கிலோகிராம்)

நிரந்தர வதிவிடத்திற்கு உரிய பொலிஸ் நிலையம் :..............................................................................

மாவட்டம் :...................................................................................................................................

தேர்தல் தொகுதி :..........................................................................................................................

கிராம அலுவலர் பிரிவு :..................................................................................................................

தொலைபேசி இலக்கம் (WhatsApp) :..................................................................................................

சிவில் அந்தஸ்து :...........................................................................................................................

பால்நிலை :...................................................................................................................................

கல்விகற்ற பாடசாலைகள் :..............................................................................................................

பாடசாலை மற்றும் பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :

| பாடசாலையின்/ பல்கலைக்கழகத்தின் பெயர் | சித்தியெய்திய பரீட்சை | பரீட்சைக்குத் தோற்றிய வருடம் | சித்தியடைந்த பாடங்கள் (தரம் உள்ளடங்கலாக) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>ஏனைய | | |

பாடசாலை அல்லது பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய பின்னர் செய்த தொழில் பற்றிய விபரங்கள் (ஏற்புடையதாயின்):

| தொழில்தருநரின் பெயர் மற்றும் முகவரி | தொழிலின் தன்மை | சேவைக்காலம் | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

பெற்றோர் பற்றிய விபரங்கள்:

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

பதவிக்கான ஏதேனும் விசேட தகைமைகள் :...............................................................................................................

விளையாட்டுகளில் படைத்த சாதனைகள் பற்றிய விபரங்கள் (பங்குபற்றிய போட்டிகள் மற்றும் விளையாட்டுக் குழுக்கள், திகதி மற்றும் படைத்த சாதனைகளுடன் தருக)

பாடசாலையில் அல்லது பல்கலைக்கழகத்தில் அல்லது வெளிவாரியான நிறுவனங்களில் காட்டிய பிற சாதனைகள் (திகதி, ஆண்டு முதலியவற்றுடன் விபரங்களைத் தரவும்) :...................................................................................

ஆயுதப்படை, தொண்டர்படை, பயிலிளவல் படை அல்லது ஆண் சாரணர் அமைப்பில் ஆற்றிய ஏதேனும் முன்னரான சேவை :...............................................................................................................................................

இலங்கை கடற்படை அல்லது ஏதேனும் ஆயுதப்படைச் சேவைகளில் அல்லது பொலிஸ் படையில் இணைவதற்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்துள்ளீர்களா? அவ்வாறெனின், அவை பற்றிய விபரங்களையும் பெறுபேறுகளையும் குறிப்பிடவும் :
...............................................................................................................................................................

சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு அல்லது இடைநிறுத்தப்பட்ட தண்டனைத் தீர்ப்பொன்றைப் பெற்றுள்ளீரா? அவ்வாறெனின், விபரங்களைத் தரவும் :...........................................................................

அரச திணைக்களமொன்றில், சபையொன்றில், கூட்டுத்தாபனமொன்றில், பகிரங்கச் சேவை தாபனமொன்றில் (மத்திய வங்கி/அரச வங்கிகள்/பல்கலைக்கழகங்கள்/சிவில் அமைப்புக்கள்/அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் கம்பனிகள் அடங்கலாக) நீங்கள் சேவையாற்றியுள்ளீரா? அவ்வாறெனின், தொழில் முடிவுறுத்தப்பட்டமைக்கான காரணங்களையும் விபரங்களையும் குறிப்பிடுக :.......................................................................................................................

நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள்:

| பெயர் | பதவி | தபால் முகவரி |
|---|---|---|
| | | |

விண்ணப்பதாரியினால் கைச்சாத்திடப்பட வேண்டிய வெளிப்படுத்தல்:

மேலே என்னால் கூறப்பட்ட விடயங்கள் உண்மையானவையும் சரியானவையும் என எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில் வெளிப்படுத்துகின்றேன். இலங்கை அரசாங்கத்தின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை கடற்படையில் உள்ள அதிகார ஆணைக்குழுவிற்காக தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் தொடர்பாக கடைபிடிக்கப்படும் நடவடிக்கைமுறையையும் பிரயோகிக்கப்படும் ஒழுங்குவிதிகளையும் நான் நன்கு வாசித்து புரிந்துகொண்டேன்.

.................... ......................................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

10-109

---

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### இலங்கைத் தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம்

தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தில் நிலவும், சார்ந்த சேவைகள் உத்தியோகத்தர் தரம் - III இன் ஆக்கவுரிமை பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2024

இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தில் நிலவும், சார்ந்த சேவைகள் உத்தியோகத்தர் தரம் - III இன் ஆக்கவுரிமை பரிசோதகர் பதவிக்கான 10 வெற்றிடங்களுக்கு பரீட்சைகள் ஆணையாளரால் நடாத்தப்படவுள்ள போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்வதற்கு கீழ்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

01. **தகைமைகள் :**

1. கீழ்வரும் தகைமைகளைக் கொண்ட பட்டதாரியாகவும், விண்ணப்ப முடிவுத் திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல்.
2. தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தில் ஆகக் குறைந்தது 5 வருட பணி அனுபவமுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேலே குறிப்பிட்ட ஆகக்கூடிய வயது வரம்பைப் பொருட்படுத்தாமல், இந்த சந்தர்ப்பத்தில் மாத்திரம் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

i. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும் பல்கலைக்கழகமொன்றில் விஞ்ஞானமாணி/சட்டமாணி அல்லது வணிகமாணி பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.
ii. ஆங்கில மொழியில் தேர்ச்சி மற்றும் கணினி அறிவு என்பன மேலதிக தகைமைகளாக கொள்ளப்படும்.

02. **பரீட்சைக்கான நிபந்தனைகள்**:

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் சார்ந்த சேவைகள் உத்தியோகத்தரின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு தொடர்பான நடைமுறைகளுக்கு அமைவாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் கொழும்பில் மாத்திரம் இப்பரீட்சை நடைபெறும்.

இப்பரீட்சையை ஒத்திவைப்பதற்கும் அல்லது இரத்து செய்வதற்குமான அதிகாரம் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தின் இணையத் தளமான www.doenets.lk இல் "எங்கள் சேவைகள்" இன் கீழுள்ள "ஆன்லைன் விண்ணப்பங்கள் (ஆட்சேர்ப்பு/E.B. தேர்வுகள்)" இல் விண்ணப்பங்கள் வெளியிடப்பட்டுள்ளதுடன் விண்ணப்பங்கள் நிகழ்நிலை ஊடாக மாத்திரமே சமர்ப்பிக்கப்பட வேண்டும். நிகழ்நிலை விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 14 ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு ஆரம்பிப்பதோடு 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 13 ஆம் திகதி பி.ப.09.00 மணிக்கு முடிவடையும்.

அரசாங்க சேவையில் /மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியை வகிக்கும் ஓர் உத்தியோகத்தர் விண்ணப்பத்தின் பிரதியொன்றினை சுயவிபரக் கோவையில் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவருக்கு அனுப்பி வைக்கவேண்டுமென்பதுடன் சேவை உறுதிப்படுத்தல் கடிதத்துடன் நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்தப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தின் பிரதியினை நேர்முகத் தேர்வின்போது முன்வைக்க வேண்டும்.

03. **சேவை நிபந்தனைகள்**:-

அரசாங்க சேவை நியமனங்களை ஒழுங்குபடுத்தும் பொதுவான நிபந்தனைகள், கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகள், 2310/29 ஆம் இலக்க 2022.12.14 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் சார்ந்த சேவைகள் உத்தியோகத்தருக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு தொடர்பான நடைமுறைகளுக்கு இணங்க தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் புலமைச் சொத்து அலுவலகத்தின் சார்ந்த சேவைகள் உத்தியோகத்தர் தரம் - III இன் ஆக்கவுரிமை பரிசோதகர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

I. நியமிக்கப்படும் அலுவலர் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடியவராக இருக்க வேண்டும்.

II. இந்த பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரியதுமாகும். உங்களுக்கு உரித்தாகும் ஓய்வூதிய முறை தொடர்பில்; எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் எடுக்கப்படவுள்ள கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும். விதவைகள்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது விதிக்கப்படும் வகையில் பங்களிப்பு தொகை செலுத்துதல் வேண்டும்

III. ஆட்சேர்ப்புக்குத் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவர். பதவியில் உறுதிப்படுத்தப்படுவதற்கு, பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் அவர்களது தகுதிகாண் காலப்பகுதியின் முடிவில் கடமைகள், வருகை மற்றும் நடத்தைகள் திருப்திகரமாக இருத்தல் வேண்டுமென்பதுடன் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

IV. அரசாங்க சேவையில் நியமனத்தினை உறுதிப்படுத்திய அலுவலர்களுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 05/2018 ஆம் இலக்க, 2018.09.11 ஆந் திகதிய சுற்றறிக்கை பிரயோகிக்கப்படும். ஆக்கவுரிமை பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று (03) வருட காலப்பகுதிக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

V. நியமிக்கப்படும் உத்தியோகத்தர் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு ஒழுங்குவிதிகள், தாபன விதிக்கோவை, அரசாங்க நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற விதிகள், பிரமாணங்கள் மற்றும் அமைச்சினதும் திணைக்களத்தினதும் பிரமாணங்கள் என்பவற்றுக்கு கட்டுப்பட்டவராவார்.

VI. இந்த வர்த்தமானி அறிவித்தலின் முதலாம் பகுதியினுடைய இரண்டாம் அத்தியாயத்தின் (II அ) ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆட்சேர்ப்பு தொடர்பான பொதுவான நிபந்தனைகளின்பால் விண்ணப்பதாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

04. **சம்பள அளவுத்திட்டம்**:

2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு இணங்க, MN 4-2016 குறியீட்டு இலக்கத்தின் பிரகாரம் ரூபா 31,490.00- 10×445- 11×660- 10×730- 5×750 - ரூபா 54,250.00 ஆகும்.

05. **வயதெல்லை**:

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதியன்று 21 வயதுக்கு குறையாமலும் 35 வயதினை விஞ்சிவிடாமலும் உள்ள இலங்கைப் பிரஜைகள் விண்ணப்பிக்க முடியும். அத்துடன் தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தில் ஆகக் குறைந்தது 05 வருட பணி அனுபவமுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகக்கூடிய வயது வரம்பைப் பொருட்படுத்தாமல் விண்ணப்பிக்க முடியும்.

06. **உடல் ரீதியான தகைமைகள்**:

I. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு தேவையானதும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்ற போதியளவுமான உடல் மற்றும் உள ரீதியான தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**பிற தகைமைகள்**

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரிகள் சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

III. 2310/29 ஆம் இலக்க 2022.12.14 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை விதிகளின் அத்தியாயம் 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையீனங்களில் எதனையும் கொண்டிருக்கக் கூடாது.

IV. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற கடைசித் திகதிக்கு முன்னர் இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான தகைமைகள் மற்றும் வயதெல்லை என்பவற்றை சகல விதத்திலும் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே குறித்த பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கான தகுதியைக் கொண்டவராவார்.

07. **ஆட்சேர்ப்பு முறை** : இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் சார்ந்த சேவைகள் உத்தியோகத்தருக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு தொடர்பான நடைமுறைகளுக்கும் அரசாங்கத்தினால் வெளியிடப்படும் சுற்று நிருபங்களுக்கும் இணங்க அனைத்து நியமனங்களும் மேற்கொள்ளப்படும்.

ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளில் அவர்கள் பெறும் புள்ளிகளின் திறமை ஒழுங்கின் அடிப்படையில் நிலவும் வெற்றிட எண்ணிக்கையின் இரண்டு மடங்கு விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பொருட்டு அழைக்கப்படுவர்.

08. **பரீட்சை முறை** :

இப்பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டுள்ளது.

| விடயம் | காலம் | உச்ச புள்ளி | சித்தியடைவதற்கான உச்ச புள்ளி |
|---|---|---|---|
| 1. பொது உளச்சார்பு | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. ஆங்கிலம் | 02 மணித்தியாலங்கள் | 100 | 40 |

I. இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடைபெறுவதுடன் பரீட்சார்த்திகள் தாம் விரும்பும் மொழியில் தோற்ற முடியும். எல்லா பரீட்சார்த்திகளும் இரண்டு வினாப்பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டும்.

II. ஒரு பரீட்சார்த்தி தான் விண்ணப்பத்தில் குறிப்பிட்ட மொழி மூலத்தை மாற்றுவதற்கு பின்னர் அனுமதிக்கப்பட மாட்டார்.

III. பாடத்திட்டம்:

**பாட இலக்கம் 01 - பொது உளச்சார்பு**

எண்கணித ரீதியான, மொழி ரீதியான மற்றும் படங்களைக் கொண்ட கட்டமைப்புக்கள் என்பவற்றினூடாக முன்வைக்கப்படும் பிரச்சனைகளுக்கு பரீட்சார்த்தியின் பிரதிபலிப்பு மற்றும் தீர்மானம் என்பவற்றை மதிப்பிடுவதன் மூலம் அவரின் கிரகித்தல் மற்றும் நுண்ணறிவை அளவிடுவதனை நோக்காகக் கொண்டது. இவ்வினாப்பத்திரம் 50 பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும்.

**பாட இலக்கம் 02 - ஆங்கிலம்**

I. கிரகித்தல்

200 சொற்களுக்கு குறையாத தெரிவு செய்யப்பட்ட ஒரு பந்தியினை வாசித்து, விளங்கி பதிலளிக்கும் ஆற்றலைக் கொண்டிருத்தல்.

II. இலக்கணம்

காலங்கள், வினைச் சொற்கள், நேர் கூற்று மற்றும் அயற்கூற்று, செய்வினை, செயற்பாட்டு வினை, பாலினம் தொடர்பான பொதுவான தெளிவினை பரீட்சித்தல்.

09. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :**

எழுத்து மூலப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளில் அவர்கள் பெறும் புள்ளிகளின் திறமை ஒழுங்கின் அடிப்படையில் நிலவும் வெற்றிட எண்ணிக்கையின் இரண்டு மடங்கு விண்ணப்பகாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பொருட்டு அழைக்கப்படுவர். ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகளைப் பெறத் தவறும் பரீட்சார்த்திகள் எவரும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்கள். புலமைச் சொத்து அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட சபையினால் ஒவ்வொரு அபேட்சகரும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

**கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சை**

| புள்ளி வழங்கப்படும் தலைப்பு | ஆகக்கூடிய புள்ளிகள் | தெரிவு செய்வதற்காக கருத்திலெடுக்கும் ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 45 | மொத்த புள்ளிகளில் 40% |
| தேசிய தொழில் **தகைமை** மட்டம் 05 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தில் கணினிப் பயன்பாடு தொடர்பான பயிற்சி (NVQ மட்டம் 05 அல்லது அதற்கு மேல்) | 30 | |
| ஆங்கில மொழியின் புரிதல் மற்றும் வெளிப்பாடு திறன் | 20 | |
| நேர்முக பரீட்சையில் பிரதிபலிக்கும் மனப்பான்மை மற்றும் ஆளுமைப் பண்புகளுக்கு | 05 | |

**ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**

எழுத்து மூலப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை என்பவற்றில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற அபேட்சகர்களுள் நிலவும் வெற்றிடங்களுக்கு ஏற்ப திறமை வரிசை பிரகாரம் மேலே 3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கேற்ப அபேட்சகர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பி வைக்கப்படும். ஒரு பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவதென்பது அவர் குறித்த பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது குறித்த பதவிக்கு தேவையான தகுதிகளைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படமாட்டாது. பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்டும் தண்டனைக்கு அபேட்சகர் ஆளாக நேரிடும்.

*10.* ***பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஒழுங்கு:***

I. *நிகழ்நிலை விண்ணப்ப படிவங்களை ஆங்கிலத்தில் மாத்திரம் பூரணப்படுத்த வேண்டும். விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான அறிவுறுத்தல்களை தரவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பங்களை பூர்த்தி செய்யும்போது அறிவுறுத்தல்களை கவனமாக பின்பற்றவும். முழுமையற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் ஏற்பு அல்லது நிராகரிப்பு தொடர்பில் விண்ணப்பிக்கும் போது பயன்படுத்தப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது குறுஞ்செய்தி ஊடாக கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்கப்படும்.*

II. *பரீட்சைக் கட்டணம் ரூபா 1,200.00 ஆகும். நிகழ்நிலை அமைப்பிலுள்ள கீழ்வரும் முறைகளினூடாக மாத்திரமே பரீட்சைக் கட்டணத்தினை செலுத்த வேண்டும்.*

(i) *எந்தவொரு வங்கியினதும் கடன் அட்டை*
(ii) *இணையத்தள கொடுக்கல் வாங்கல் வசதியுடன் கூடிய எந்தவொரு வங்கியினதும் பற்று அட்டை*
(iii) *இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கிச் சேவை முறை*
(iv) *இலங்கை வங்கியின் ஏதேனும் கிளை*

***குறிப்புக்கள்.-***

(அ) *மேற்படி கொடுப்பனவு நடைமுறைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.*

(ஆ) *பணம் பெற்றுக்கொண்டதை எஸ்.எம்.எஸ் அல்லது மின்னஞ்சல் வழியாக தெரிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணம் முழுமையாக செலுத்தப்பட வேண்டுமென்பதுடன், குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்தப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கொடுப்பனவு முறையினூடாக பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துவதில் ஏதேனும் பிழைகள் ஏற்படின், அவற்றுக்குப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது.*

(இ) *எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் திருப்பித் தரப்படமாட்டாது அல்லது வேறு எந்தத் தேர்வுக்கும் மாற்றப்படமாட்டாது.*

*11.* ***பரீட்சை அனுமதி அட்டை:***

I. *வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டோர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற அனுமானத்தின் அடிப்படையில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி தினத்திற்கு அல்லது அதற்கு முன் குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை முன்னிலைப்படுத்திய விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அது குறித்த அறிவித்தல் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத் தளத்தில் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்களில் அனுமதிப்பத்திரம் கிடைக்காத பட்சத்தில் அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். கொழும்பிற்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரியாயின் அவ்விபரங்களுடன் அனுமதிப்பத்திரத்தின் பிரதியை அனுப்புவதற்கு தொலைநகல் இலக்கத்துடன் கோரிக்கைக் கடிதத்தை தொலைநகல் மூலம் அனுப்பி இது தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் பயன்மிக்கதாக அமையும். பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும் வேளையில் தேவையாயின் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தி அந்தஸ்தினை உறுதிப்படுத்துவதற்காக தாம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்துடன் போட்டோப் பிரதி, பரீட்சைக் கட்டணம் கொடுப்பனவிற்கு உரியதாயின் அதற்கான பற்றுச் சீட்டுப் பிரதியும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.*

II. விண்ணப்பத்திலும் பரீட்சை அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரரின் ஒப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். மேலும் பரீட்சைக்காக தோற்றும் முதல் தினத்தன்றே மண்டப அதிகாரிக்கு தமது ஒப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை சமர்ப்பிக்க வேண்டும்.

III. விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை கிடைத்திருப்பதென்பது, அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது குறித்த பதவிக்கு தேவையான தகைமைகளை பூர்த்திசெய்துள்ளதாக கொள்ளப்படமாட்டாது.

*12.* **பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதிப்படுத்தல்:**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் மண்டப அதிகாரி திருப்தியடையும் வகையில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக கீழ்க்காணும் ஏதேனும் ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்:

I. தேசிய அடையாள அட்டை ;

II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;

III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அத்துடன் பரீட்சார்த்திகள் அவர்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் முகம் மற்றும் காதுகளை மூடுவதை தவிர்த்து பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். மேலும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தில் உள்நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தில் உள்நுழைந்த பின்னர் பரீட்சை முடிந்து வெளியில் செல்லும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரரை அடையாளம் காண்பதற்கு ஏதுவாக முகம் மற்றும் காதுகளை மூடாமல் இருக்க வேண்டுமென்பதுடன், இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களை அணிவதிலிருந்தும் தவிர்ந்து கொள்ள வேண்டும்.

*13.* **பொய்யான தகவல்களை வழங்குதல் :**

இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கிணங்க பரீட்சார்த்தி தகைமை அற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலத்துக்குள் அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி அந்தஸ்த்தை இரத்துச்செய்ய இடமுண்டு. பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விடயம் உண்மைக்குப் புறம்பானது எனத் தெரியவரும் பட்சத்தில் அல்லது ஏதேனும் ஒரு விடயத்தை வேண்டுமென்றே மறைத்திருப்பின் தொடர்புடைய நடபடிமுறைக்கிணங்க உடனடியாக அவரை அரசாங்க சேவையிலிருந்து நீக்க இடமுண்டு. அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகள் பூர்த்தி செய்யப்படாத பரீட்சார்த்தியின் பரீட்சார்த்தி அந்தஸ்த்து ரத்து செய்யப்படலாம்.

*14.* மேற்படி பிரமாணங்களில் மேவப்படாத விடயங்கள் சம்பந்தமாக எழும் பிரச்சினைகள் தொடர்பில் புலமைச் சொத்து அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் முடிவே இறுதி முடிவாகும்.

*15.* இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின் அவ்வேளை சிங்கள மொழி வாசகம் மேலோங்கி நிற்கும்.

கீதாஞ்சலி ஆர். ரணவக்க
புலமைச் சொத்துக்கள் பணிப்பாளர் நாயகம்,
இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைத் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் சார்ந்த சேவைகள் உத்தியோகத்தர் தரம் - III இன் ஆக்கவுரிமை பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப்பரீட்சை - 2024**

**Competitive Examination of Recruitment for the Post of Patent Examiner in Grade III of Associated Services at National Intellectual Property Office of Sri Lanka - 2024**

அலுவலக பயன்பாட்டுக்கு மட்டும்

| பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் | |
|---|---|

*சிங்களம் - 2*
*தமிழ் - 3*
*ஆங்கிலம் - 4*
*(குறித்த இலக்கத்தினை பெட்டிக்குள் இடுக)*

*01.* பெயர் :

*1.1* முழுப் பெயர் ( ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) (உதா: SILVA, B.A.) :..........................................................................
..........................................................................................................................................

*1.2.* முழுப் பெயர் (தமிழில்) :-.................................................................................................................

*02.* முகவரி :

தனிப்பட்ட முகவரி :..........................................................................................................

அலுவலக முகவரி :.............................................................................................................

(அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்பட வேண்டியது) (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) ..............................................................
..........................................................................................................................................

*03.* *3.1* பால் (உரிய இலக்கத்தை கட்டத்தில் இடுக)

பெண் ☐ ஆண் - 0
ஆண் ☐ பெண் - 1

*3.2* பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

*3.3* விண்ணப்ப முடிவுத் திகதியில் வயது:

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

*3.4* விவாக நிலை ( உரிய இலக்கத்தை கட்டத்தில் இடுக)

திருமணமானவர் : ☐
திருமணமாகாதவர் : ☐

*04.* தேசிய ஆள் அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

*05.* தொலைபேசி இலக்கம் :

கையடக்க தொலைபேசி இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐

நிலையான தொலைபேசி இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐

06. கல்வித் தகைமைகள்:

6.1 பட்டம் பற்றிய விபரம்:

| பட்டம் | நிறுவனம் | வகுப்பு | பாடங்கள் | செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|---|
| | | | | |

6.2 க.பொ.த. உயர்தரப் பரீட்சை : ஆண்டு:................ மாதம்: ................

சுட்டிலக்கம்: ........................

| பாடங்கள் | பெறப்பட்ட சித்திகள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

6.3 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை : ஆண்டு:................ மாதம்: .............

சுட்டிலக்கம்: ........................

| பாடங்கள் | பெறப்பட்ட சித்திகள் | பாடங்கள் | பெறப்பட்ட சித்திகள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

07. தற்போது வகிக்கும் பதவி மற்றும் முன்னர் வகித்த பதவி :

| பதவி | நிறுவனம் | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| | | | |

08. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் அலுவலகம்:

செலுத்திய தொகை:

செலுத்திய திகதி:

பற்றுச்சீட்டின் இலக்கம்:

| பற்றுச்சீட்டைக் கழராதவாறு இங்கே ஒட்டவும் |
|---|

09. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் இணங்க சரியானதும் உண்மையானதும் என வெளிப்படுத்துகிறேன். என்னால் வெளிப்படுத்தப்பட்ட இக்கூற்று பொய்யானது என்று நிரூபிக்கப்பட்டால், நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் தகுதியற்றவராவேன் என்றும் நியமனம் கிடைத்ததன் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்பட முடியும் என்றும் நான் அறிவேன்.

பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுவேன் என்றும் வெளிப்படுத்துகிறேன்.

......................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : .........................

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்துதல்**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி. ................................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும் அதற்கான பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

..............................................................................
சான்றுப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம் மற்றும்
உத்தியோகபூர்வ முத்திரை

பெயர் : ....................................
பதவி : .....................................
முகவரி : ......................................
திகதி : ......................................

- விண்ணப்பங்களைக் கோருவதற்கான அறிவித்தலின் 10 ஆவது பிரிவின் 10 ஆவது உபபிரிவில் குறிப்பிடப்பட்டிருப்பதற்கு இணங்க விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்துதலுக்கு அமைய வேண்டும்.
- தொடர்புடைய திணைக்களத்தின் அல்லது நிறுவனத்தின் தலைவர் ஊடாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றுப்படுத்தலுடன் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ........................................ எனும் பெயருடைய விண்ணப்பதாரி இவ் அலுவலகத்தில் வேலை செய்கின்றார் என்றும், குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தையும் இவ் அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுடன் நான் தனிப்பட்ட ரீதியாகப் பரீட்சித்துப் பார்த்தேன் என்றும், அவை சரியானவை என்றும் அவர் இப்பதவிக்காக தெரிவுசெய்யப்படின் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

..............................................................................
திணைக்களத் தலைவரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரையைப் பதித்தல் வேண்டும்)

பெயர்: ....................................................

முகவரி : ...................................................

திகதி : ........................................................

10-100

## திருத்தம்

## காணி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களம்

*சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் கீழ் இயங்கும் காணி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை தொகுதியில் III ஆவது தரத்தின் உதவிப் பணிப்பாளர் (மாவட்ட காணிப் பயன்பாடு) பதவிக்கான மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை - 2024*

**விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியை நீடித்தல்**

இல. 2399 கொண்ட 2024.08.23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோருகின்ற இறுதித் திகதி 2024.10.25 ஆந் திகதி வரை நீடிப்பதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

எவ்வாறாயினும், பரீட்சை அறிவிப்பு மூலம் எதிர்பார்க்கப்படும் எல்லாத் தகைமைகளையும் 2024.09.23 ஆந் திகதி அன்று பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளை படி,

செயலாளர்,<br>
சுற்றுலா மற்றும் காணி அமைச்சு.

சுற்றுலா மற்றும் காணி அமைச்சு,<br>
"மிஹிகத மெதுர",<br>
1200/6 இராஜமல்வத்தை வீதி,<br>
பத்தரமுல்லை,<br>
2024, ஒற்றோபர் 11.

10-148